# நவகத்தேகம பிரதேச சபை
## புத்தளம் மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மே 13 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மே 08 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 நவம்பர் 07 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, நவகத்தேகம பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நவகத்தேகம பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 36,443 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிவிளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 72,811 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,531,601 ஆக இருந்தது

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

பின்வரும் நிதிக் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சபையால் வெளித்தரப்பினருக்குச் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 1,902,545 தொகையானதுடன் இதில் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 515,320 ஆகக் காணப்பட்டது.

(ஆ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்த ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 799,431 ஆக இருந்தது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ |
| (i) | வாடகை | 1,304 | 1,015 | 289 |
| (ii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 111 | 102 | 09 |

### 2.3.2 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

பிரதேச சபைக்குக் கிடைக்கவேண்டிய நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 வாடகை

கிரிமட்டியாவ சமுர்த்தி சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்த சபைக்குரிய பழைய நூலகக் கட்டிடத்தின் நிலுவையான வாடகை ரூபா 21,000 தொகையை அறவிடுவதற்காக கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான பௌதீக வளங்கள்**

சபைக்குரிய ரூபா 332,500 பெறுமதியான மினி குபோட்டா உழவு இயந்திரமும் டிரேலரும் பல வருட காலமாக விளைவற்றுக் காணப்பட்டன.

**2.5 செயற்பாட்டுத் திறமையீனங்கள்**

2012 ஆம் ஆண்டின் போது மகநெகும 13 செயற்திட்டங்களுக்காக ரூபா 6,500,000 தொகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் ரூபா 2,500,000 பெறுமதியான 5 செயற்திட்டங்கள் மாத்திரம் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

**2.6 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) சொத்து முகாமைத்துவம்
(இ) வருமான நிர்வாகம்